

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோட்டக்கலை துறையின் மூலம், தேசிய தோட்டக்கலை இயக்க 2016-2017-ம் ஆண்டு திட்டம் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், பவர்டில்லர், மினிடிராக்டர் மற்றும் ப்ரஸ்கட்டர், செயின்சா ஆகியவற்றை தோட்டக்கலை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (20.10.2016) வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.எம்.நிஜாமுதீன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 737/2016 நாள்: 20.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்களை இன்று (20.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோட்டக்கலை துறையின் மூலம், தேசிய தோட்டக்கலை இயக்க 2016-2017-ம் ஆண்டு திட்டம் தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், கொட்டாரத்தை சார்ந்த திரு. சி.அனந்தபத்மநாபன் என்பவருக்கும், அகஸ்தீஸ்வரம் என்ற ஊரை சார்ந்த திரு. பி. பிரதீப்குமார் மற்றும் திரு. பி.நாகப்பன் நாயர் என்பவர்களுக்கும், கணபதிபுரத்தை சார்ந்த திரு. எஸ். கனகசபை மற்றும் திரு. ஏ. சுந்தர் ஆகிய தோட்டக்கலை விவசாயிகளுக்கு ரூ.60 ஆயிரம் மானியத்தில் ரூ.1,64,175/- மதிப்பிலான பவர்டில்லர் இயந்திரங்களும், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, பண்ணை இயந்திரமாக்குதல் திட்டத்தின் கீழ் மினிடிராக்டர் ரூ.2,90,625/- மதிப்பிலும், ப்ரஸ்கட்டர் ரூ.20,450/- மதிப்பிலும், செயின்சா ரூ.22 ஆயிரம் மதிப்பில் கன்னியாகுமரி தோட்டக்கலை அலுவலர், அரசு தோட்டக்கலைப்பண்ணைகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (20.10.2016) வழங்கினார்.

நிகழச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் திரு. நா.இளங்கோ, வேளாண்மை துணை இயக்குநர் திரு. சந்திரசேனன் நாயர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.எம்.நிஜாமுதீன், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. எம்.அசோக் மேக்ரின், வேளாண்மை பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் திரு. ஆனந்தபாபு, தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி. யோ.ஷீலாஜாண், வேளாண்மை அலுவலர் த. ஆதிநாதன் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.